මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: பிடி/சீபீபி/4/1/23 – 2015
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2015.03.31

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 2/2015**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும்
நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள அனைவருக்கும்

**அரசாங்க செலவினத்தினை முகாமை செய்தல் - 2015 நிதி வருடம்**

2015 இன் 1 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தின் கீழ் 2015 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒவ்வொரு செலவினத் தலைப்புக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி செலவிடல்களுக்கான அதிகாரப் பத்திரம் தொடர்பாக 2015.02.19 ஆந் திதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 01/2015 மூலம் உங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

02. 2015 ஆம் ஆண்டுக்கான செலவினங்களை மேற்கொள்வது தொடர்பாக தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை வினைத்திறன் மிக்கதாகவும் செயலாற்றுகை உடையதாகவும் முகாமை செய்வதற்கான அவசியத்தை கவனத்திற் கொண்டு பின்வரும் நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**03. வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல்**

2015.01.29 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2015 திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்துடன் தொடர்பாக கௌரவ நிதி அமைச்சரினால் சமாப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவு தொடர்பில் உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த வரவு செலவுத்திட்டத்தினைச் செற்படுத்துவது அரசாங்கத்தின் முன்னுரிமை விடயம் என்ற வகையில், அவ்றிறனை உடனடியாகவும் மக்களுக்கு அதி கூடிய நிவாரத்தினை வழங்கும் வகையில் செயற்படுத்துவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் தமது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். குறித்த வரவு லெவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவது தொடர்பில் தேவையான நிதி ஏற்பாடு தற்பொழுது தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, உங்களது அமைச்சுக்கள்/திணைக்களங்களின் மூலம் செயற்படுத்தப்பட வேண்டிய வரவு செலவுத்திட்ட முன்மொழிவொன்று இருக்குமாயின், அதுபற்றிய விரிவான தகவல்கள் உள்ளடங்கலான திட்டமொன்றினைத் தயாரித்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதனடிப்படையில், தேவையான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்தவகையில், தேவையான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வருமானம் ஈட்டல் தொடர்பாக அல்லது ஒதுக்கீடு அவசியமற்ற வரவு செலவுத்திட்ட முன்மொழிவு தொடர்பாக மிக விரையில் உரிய நடவடிக்கைகளை ஆரம்பித்து, முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதது போன்று அது தொடர்பாக திறைசேரிக்கு தெரியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோன்று, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் முன்னேற்றம் தொடர்பாக நிரந்தர மீளாய்வொன்றினை மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் தொடர்புடைய தகவல்களை வழங்குவதற்குப் பொறுப்பான அலுவலர் ஒருவருக்கு பிரதான கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் மூலம் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**04. செலவு முகாமைத்துவம்**

நிறுவனங்கள் அனைத்தினாலும் செலவு முகாமைத்துவம் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அதன்போது 2014.12.31 ஆந் திகதி தீர்க்கப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்பான அனைத்துச் செலவினங்கள் தொடர்பிலும் 2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாதிருப்பின் 2015 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் மூலம் உரிய செலவினங்களை தீர்ப்பனவு செய்து எஞ்சிய ஒதுக்கீட்டின் அளவினை மீண்டும் முன்னுரிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன் அடிப்படையில், குறைந்த முன்னுரிமையொன்றுக்கு உரிய கருத்திட்டங்கள் எதிர்வரும் வருடங்களில் அரையாண்டு வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்திற்குள் செயற்படுத்தும் தன்மை தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**05. மேலதிக ஒதுக்கீடு**

2015 நிதியாண்டில் மேலதிக நிதி ஒதுக்கீட்டினை மட்டுப்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதனால் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் தமது செலவினத் தலைப்பின் கீழ் இடம்பெறும் செலவினம் தொடர்பில் சிறந்த முகாமைத்துவத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும். அதேபோன்று, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளில் அத்தியவசிய மற்றும் எதிர்பாராத செலவினம் தவிர்ந்த வேறு காரணங்களுக்காக மேலதிக ஒதுக்கீடு தொடர்பான வேண்டுகோள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. எனவே, தற்பொழுது காணப்படும் ஒதுக்கீட்டுக்குள் செலவின முகாமைததுவத்தினை மேற்கொள்வதற்காக செயற்பட வேண்டியுள்ளதுடன் ஒதுக்கீட்டு வரையறையினை விஞ்சிய வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினங்களுக்கு திறைசேரி எவ்வதமான பொறுப்பையும் ஏற்க மாட்டாது.

**06. வயர்மன்ட் செயற்பாட்டின் கீழ் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மாற்றம் செய்தல்**

கணக்கீட்டு வருடம் முடிவடைந்ததன் பின்னர் (டிசம்பர் 31 ற்குப் பின்னர்) நி.பி.குறிப்பு 66 மாற்றல் மூலமான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. நிதிவருடம் முடிவடைந்ததன் பின்னர் கணக்கீட்டின் பிழையினை திருத்துவதற்கான நி.பி. குறிப்பு 69 இன் கீழ் மாற்றல் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படுவதுடன், அதனை குறித்த திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு அனுப்புதல் பொறுப்பாகும்.

**07. வாகன பாவனை**

2015 வருடத்திற்குள் அரசாங்க நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது என்பதுடன் தற்பொழுது காணப்படும் வாகனங்களை முகாமை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிதி குத்தகை முறைமையின் கீழ் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் அத்திணைக்களத்தின் முழுமையான அங்கீகாரமின்றி வேறு நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கு எந்த ஒரு நிறுவனத் தலைவருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. எனவே, அவ்வாகனங்களின் சொந்தம் தொடர்பாக இடம்பெறும் அனைத்து விதமான மாற்றங்களும் தேசிய வரவு செலவுத்திட்டத்தின் அனுமதி மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கின்றேன்.

அதேபோன்று, 2015.01.29 ஆந் திகதி நிதி அமைச்சரின் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்துடன் தொடர்பான வருமான முன்மொழிவு இல.8.51 இற்கு அமைவாக, அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான பழுதடைந்த/பயன்படுத்துவதற்கு முடியாது கைவிடப்பட்டுள்ள வாகனங்களை பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்வதற்கு

முன்மொழியப்பட்டுள்ளது. இதன்போது, மோட்டார் வாகனங்கள் போன்றே பேருந்துகள், புகையிரதம், லொறி மற்றும் ஏனைய வாகனங்களும் ஏற்புடையனவாகும். இத்தொழிற்பாட்டினை 2015.06.30 திகதியளவில் நிறைவு செய்வதற்கு முடியுமான வகையில் நி.பி. குறிப்பு 756(4) என்பதற்கு அமைவாக விசேட பரிசீலனைச் சபை ஒன்றினை நியமித்து அப்புறப்படுத்துவதற்குப் பொருத்தமான வாகனங்களைக் கண்டறிய வேண்டியுள்ளது. இச்சபையில் பின்வருவோர் அங்கம் வகித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| தலைவர் | - சிரேஷ்ட பதவிநிலை அலுவலராவார் |
| உறுப்பினர் | - இயந்திரவியல் பொறியியலாளர் ஒருவர்/தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் |
| உறுப்பினர் | - நிறுவனத்தின் ஆதனங்களுக்கான பொறுப்பிலுள்ள பதவிநிலை அலுவலரொருவர் |

பாவனைக்குதவாது அகற்றப்பட வேண்டிய வானம் தொடர்பான தகவல்கள் படிவம் 01 ற்கு அமைவாக 2015.04.10 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்கள் பின்னர் வழங்கப்படும்.

இந்த சுற்றறிக்கையின் கீழ் அப்புறப்படுத்தப்படுவதற்கு தகமை பெறும் வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 வருடத்தினை விஞ்சிய வாகனங்கள் மாத்திரமே. அவ்வாறாயினும், வாகனம் பாவிக்க முடியாதது என தொழில்நுட்ப நிபுணத்துவம் மிக்க குழுவொன்றின் மூலம் தீர்மானிக்கப்பட்டவை, சிதைவடைந்த வாகனங்கள், மற்றும் விசேடமாக இனம் காணப்பட்ட வாகனங்கள் அரசாங்க நிதித் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன அப்புறப்படுத்தப்படுதல் வேண்டும்.

பரிசீலனைக் குழுவின் சிபாரிசினைக் கவனத்திற் கொண்டு அப்புறப்படுத்த வேண்டிய வாகனங்கள் எவை என்பன தொடர்பில் இறுதித் தீர்மானம் பிரதான கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலரின் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**8. பிரசாரம் மற்றும் அனுசரணை விளம்பர செலவினங்கள்**

அரசாங்க நிறுவனங்களின் மூலம் இதுவரை காலமும் பல்வேறு பிரசார நடவடிக்கைகள் மற்றும் அனுசரணை விளம்பரங்களுக்காக அரசாங்க நிதி பயன்படுத்தப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. எனவே, அரசாங்க நிதியினை வீணாகச் செலவிடுவதனை தவிர்ப்பதற்காக அவ்வாறான செலவினங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ளாதிருப்பதற்கு அனைத்துப் பிரதான கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலரும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பிரதான கணக்கீட்டு அலுவலர் /கணக்கீட்டு அலுவலரின் தனிப்பட்ட கவனத்திற்கு கொண்டு வருவதுடன் அதற்கமைவாக செயற்படுவதற்கும் எதிர்கார்க்கின்றேன்.

ஆர்.எச்.எஸ். சமரதுங்க

திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்

படிவ இல. 01

## அரசாங்க நிறுவனங்களில் அப்புறப்படுத்தப்பட வேண்டிய வாகனங்களை இனம் காணல்

அமைச்சு:

திணைக்களம்/நிறுவனம்:

| தொடர் இல. | வாகன இல. | வகை/மாதிரி | *கொள்வனவு விலை | *கொள்வனவு செய்த திகதி அல்லது வருடம் | இயந்திர கொள்ளவு | *ஓடிய தூரம் | வேறு தகவல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(*தகவல் இருப்பின் குறிப்பிடவும்)

தயாரித்தது : ..............................

பரிசீலனை செய்தது: .......................

..........................................

நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்